# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 10/– |
| ஆண்டுச் சந்தா | ரூ. | 100/– |
| ஆயுள் சந்தா | ரூ. | 1000/– |

மலர் : 11 இதழ் : 11 செப்டம்பர் – 2015




ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். நஹட்டியா கர்வால்

**ஒஸ்கா,** மத்தியப்பிரதேசம்




எனது பெயர் நஹட்டியா கர்வால். நான் மத்தியப்பிரதேசத்தில் ஜாபுவா மாவட்டத்தில் அமைந்துள்ள ஒஸ்கா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு, சண்டை போடுவது போன்ற பாவங்களுக்கு அடிமையாகவும், அசுத்த ஆவிகளையும், விக்கிரகங்களையும் வணங்கி வந்தேன். எங்கள் குடும்பத்தில் அனைவரும் பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்தோம். நானும் சுமார் 10 ஆண்டுகள் பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு, அதினிமித்தம் வியாதியினால் கஷ்டப்பட்டேன். எனது சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை.

இந்நிலையில் ஷாலோம் விசுவாசி நார்சிங் பாய் என்பவர், எனக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறி ஷாலோம் சஜேலி சபைக்கு அழைத்துச் சென்றார். அங்கு சபைப் போதகர். குல்லா டாமோர் அவர்கள் எனக்கு சுவிசேஷம் கூறி எனக்காக ஜெபித்தபோது, தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தார். அதுமட்டுமல்ல எனது மகள் பிறந்ததிலிருந்தே கால் நடக்க முடியாமல் இருந்தாள். அவளுக்காகவும் போதகர் ஜெபித்த போது, தேவன் எனது மகளுக்கும் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதங்களின் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டோம். தொடர்ந்து சஜேலி ஷாலோம் சபைக்கு சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தேன்.

பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரத்தினை தேவன் கொடுக்கவே, 2005–ல் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, ஒரு மாத வேதாகம மற்றும் ஊழியப் பயிற்சி பெற்று, எனது சொந்த கிராமமாகிய ஒஸ்காவில் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். 2 குடும்பத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சபையானது இப்பொழுது 125 குடும்பங்கள் கொண்ட பெரிய சபையாக மாறியுள்ளது. ஞாயிறு தோறும் மக்கள் உற்சாகமாய் தேவனை ஆராதித்து வருகிறார்கள். 2 கிளை சபைகளையும் உருவாக்க தேவன் கிருபை செய்தார். எங்களுக்கு 4 பிள்ளைகள் இருக்கிறார்கள். எங்கள் கிராமம் முழுவதும் இயேசுவை அறிய வேண்டுமென்ற தரிசனத்துடனும் வாஞ்சையுடனும் நாங்கள் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Jesus Redeems,** Nalumavadi.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 580 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 660 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 250 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2500/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## உங்கள் சகோதரனிடமிருந்து



**கிறிஸ்துவுக்குள் மிக அன்பான ஷாலோம் பங்காளர்களே,**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். தேவ கிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் உங்கள் தியாகமான ஆதரவுகளினாலும், பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியங்கள் வளர்ந்து வருகிறது. உங்கள் ஜெபத்திற்காகவும், உங்கள் அன்பின் ஆதரவுக்காகவும் தேவனை துதித்து உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

குஜராத் மாநிலத்தில் தாவடியா கிராம ஆலயத்தையும், மத்தியப்பிரதேசத்தில் ராம்புரி கிராம ஆலயத்தையும் பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். மேலும் 20 கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலய கட்டுமான பணிக்காக ஜெபியுங்கள். விசேஷமாக ஊழியப்பாதையில் 25ம் ஆண்டில் அனைத்து சுதேச ஊழியர்களும், மூப்பர்களும், விசுவாசிகளும் இணைந்து நம் தலைமுறையிலேயே நம் பீல் மக்கள் நம்முடைய இரட்சகராகிய இயேசுவை அறிந்து கொள்ள வேண்டும் என்று ஜெபித்து ஆத்தும பாரத்துடன் ஊழியம் செய்து வருகிறார்கள். இந்த வெள்ளிவிழா ஆண்டில் புதிதாக சுமார் 400 ஊழியர்களும், 400 புதிய சபைகளும் ஒவ்வொரு விசுவாசிகளும் ஒரு புதிய குடும்பங்களை ஆண்டவரிடத்தில் வழிநடத்தவும் ஜெபியுங்கள்.

கர்த்தருக்குச் சித்தமானால் இந்த வெள்ளி விழா ஆண்டில் குஜராத்தில் அனைத்து ஊழியங்களும் நடத்துவதற்காக ஷாலோம் பவன் (SHALOM BHAVAN) (3 மாடி கட்டிடம்) கட்டி எழுப்பவும், மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியாவில் பேராலயம் கட்டி எழுப்பவும், இராஜஸ்தானில் பிஜல்பூர் கிராமத்தில் நம்முடைய ஷாலோம் பள்ளிக்கூடம் கட்டிடம் கட்டி எழுப்பவும், ஹரிநகர் கிராமத்தில் ஷாலோம் மாணவர் விடுதி கட்டப்படவும் கருத்தாக ஜெபியுங்கள். மேற்கண்ட திட்டங்களுக்கான நிதியுதவி 300 லட்சங்கள் கிடைக்கப்பெற ஜெபிக்கவும். உங்களால் முடிந்த பங்கினை அனுப்ப அன்புடன் கேட்கிறேன்.

பணித்தளங்களில் வெள்ளிவிழா திட்டங்கள் நிறைவேற்றுவதற்கான அனைத்து பயிற்சி திட்டங்களையும் மற்றும் சிறப்பு கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள். மேலும் ஊழிய பொறுப்புகளை நிறைவேற்ற பொறுப்புள்ள முழு நேர பணியாளர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

என் அன்பு மகள் ஜாய் ஷெக்கினா ஆகஸ்ட் 28ம் தேதி தன்னுடைய 6வது ஆண்டு மருத்துவ இறுதி ஆண்டு படிப்பை நிறைவேற்ற ரஷ்யாவிற்கு சென்றிருக்கிறாள், அதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். நாங்களும் உங்கள் யாவருக்காகவும் குடும்பமாக, சபையாக இணைந்து ஜெபித்து வருகிறோம்.

**“...உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்” உபாகமம் 28:1** என்ற வாக்குத்தத்தத்தின்படி உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)



# "அறுப்புக்கு விளைந்திருக்கும் வயல் நிலங்கள்"

சிறப்புச் செய்தி : பேராயர். **வே. தேவதாஸ்**

யோவான் நான்காம் அதிகாரத்தில் 1 முதல் 42 வரை உள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்திரீயை நித்திய ஜீவனுக்கு நேராக நடத்தி, அவள் மூலமாக முழு கிராமமே உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்த சம்பவத்தை வாசிக்கிறோம். இதனை சற்று தியானிப்போம் :

## 1. தேவனுடைய சித்தத்தைச் செய்வதுதான் போஜனம்

சமாரிய ஸ்திரீயுடன் இயேசு உரையாடின பின்பு, அவள் கிராமத்திற்குச் சென்று அநேகருக்கு இயேசுவைப் பற்றி அறிவிக்க செல்லும் வேளையில், சீஷர்கள் போஜனம் கொண்டு வந்து ஆண்டவராகிய இயேசுவுக்கு கொடுக்கிறார்கள். ஆனால் இயேசுவோ ஏற்றுக் கொள்ளவில்லை. **..."நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார். ...... நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது". –** யோவான் 4 : 32–34

வேதம் சொல்லுகிறது இயேசு பிரயாணத்தால் களைப்படைந்திருந்தார். தாகத்துடன் இருந்தார். சாப்பிட அவருக்கு ஒன்றுமில்லாததால் போஜனம் வாங்க சீஷர்கள் சென்றிருந்தார்கள். அவர் பசியாகவும் இருந்தார். ஆனால் பசியும், தாகமும் அவரை மேற்கொள்ளவில்லை. இருப்பினும் ஒரே ஒரு ஆத்துமாவை வழி நடத்த அவர் நேரத்தை செலவழித்தார். அவர் தேவ குமாரனாக, யூதனாக இருந்தாலும் தன்னைத் தாழ்த்தி அந்த ஸ்திரீயின் ஆத்துமாவை அவர் கண்டார். பாவத்தில் மரித்து போன அவள் மீது ஆத்தும பாரம் கொண்டார். தன்னுடைய சரீர களைப்பைப் பொருட்படுத்தாது அவளை நித்திய ஜீவனுக்கு நேராக நடத்தினார். ஒதுக்கப்பட்டவள், தாழ்த்தப்பட்டவள் என எண்ணாமல் நற்செய்தியை அவளுக்கு அறிவித்தார்.

இயேசு கிறிஸ்து ஊழியத்தின் பாதையில் திரளான ஆத்துமாக்களையும், குடும்பங்களையும் கர்த்தரண்டையில் நடத்தினார். அதே வேளையில், சமாரிய பெண், பாவியான ஸ்திரீ, சகேயு, நிக்கொதேமு, ஐசுரிவரியவான் என அநேக ஆத்துமாக்களை நடத்தினார் (Personal Evangelism). மரிக்கும் தறுவாயில் இருந்தபோது கூட இடதுபுறக் கள்ளனைக் கூட நித்திய ஜீவனுக்கு நேராக நடத்தினார். பிதாவின் சித்தம் ஆத்துமாக்களை இரட்சிக்க வேண்டும் என்பதே!

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நல்ல ஆத்தும ஆதாயம் செய்யும் தேவன். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதை தன் போஜனமாக வைத்துள்ளார். நாமும் இயேசுவைப் போல் வாழ்கிறோமா? உண்ணும் உணவையும், உலக வாழ்க்கையின் இன்பங்களையும் மட்டுமே சுயமாக அனுபவித்து ஆத்தும பாரமில்லாமல் வாழ்கிறோமா? இவ்வுலகில் 60,70,80 வருடங்கள் அதிகமாய் புசித்திருந்து வாழ்ந்து வருடத்திற்கு ஒரு ஆத்துமாவைக்கூட வழிநடத்தாமல் வாழ்ந்து விட்டால்

நாம் எப்படி தேவனை பரலோகத்தில் சந்திப்போம். ஆத்துமா ஒன்றும் இரட்சிக்காமல் வெறும் கையனாக எப்படி நிற்போம்? இன்றைக்கே தீர்மானம் செய்வோம்! ஒரு நாளைக்கு ஒரு நபருக்காவது நற்செய்தி கூறுவோம். பிதாவின் சித்தம் ஒருவரும் கெட்டுப் போகக் கூடாது என்பதே, அந்த பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே நமது போஜனமாக இருக்கட்டும்.

## 2. கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்

இயேசு கிறிஸ்து சீடர்களைப் பார்த்துக் கூறினார் **...“இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்”...** (யோவான் 4:35). திரளான அறுவடை, ஆயத்தமான அறுவடை சீஷர்களுக்கு அதைக் காணமுடியவில்லை. தேவன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்படி கூறினார். ஒரு முறை இயேசு கிறிஸ்து ஒரு குருடனின் கண்களை தொட்டு சுகமாக்கும் போது முதல் முறை தொட்டபின் அவனை எதைக் காண்கிறாய் என்று கேட்டபோது, மனிதர்களை மரங்களைப் போல் காண்கிறேன் என்றான். இயேசு மறுபடியும் தொட்டபோது மனிதர்களை மனிதராக கண்டான். நாமும் திரளான ஆத்துமாக்களைக் காணும்படியாக நம் கண்களை ஏறிட்டுப் பார்க்க வேண்டும். மனிதர்களை விலையேறப்பெற்ற, அறுப்புக்கு விளைந்திருக்கும் ஆத்துமாக்களாய் காண வேண்டும்.

**இயேசு கூறினார் :** இப்பொழுதே வயல் நிலங்கள் ஆயத்தமாகி உள்ளது. உலகமெங்கும் ஒவ்வொரு நாடுகளிலும் சபைகள் பெருகி வருகின்றன. ஊழியர்களும் மந்தைகளைப் போல் எழும்பி வருகிறார்கள். பீல் ஆதிவாசி விசுவாசிகள் அனுதினமும் ஆத்தும ஆதாயம் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு ஊழியரும் அநேக சுதேச ஊழியர்களை எழுப்பி வருகிறார்கள். ஒவ்வொரு ஷாலோம் சபைகளும் கிளை சபைகளை ஸ்தாபித்து வருகின்றன. 2020க்குள் மிகப் பெரிய அறுவடையை தேவன் வைத்துள்ளார். 2015க்குள் 1000 திருச்சபைகள், 1000 சுதேச ஊழியர்கள் எழும்ப தேவன் திறந்த வாசல்களைத் தந்துள்ளார். மெய்யாகவே தேவன் திரளான அறுவடையை தேசத்தில் தந்துள்ளதைக் காண முடிகிறது.

## 3. வேலையாட்களை அனுப்ப வேண்டிக் கொள்ளுங்கள்.

மத்தேயு 9ம் அதிகாரத்தில் 36–38 வசனங்களில் கூறுகிறார் : **“அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத், தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி : அறுப்பி மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்”.** திரளான அறுவடையை காணும் இயேசு மனதுருகி மேய்ப்பனற்றவர்கள், தொய்ந்து போனவர்கள், சிதறப்பட்டவர்கள், இரட்சிப்பைத் தேடி திரளாக வரும் ஜனங்களுக்கு மேய்ப்பர்கள் தேவை என உணர்ந்து, திரளான ஜனங்களின் பொறுப்பை தேவன் 12 சீஷர்களுக்குக் கொடுக்கிறார். முதல் பொறுப்பு என்ன? பிதாவினிடத்தில்

வேண்டிக் கொள்ளுங்கள் என்பதே. நம் தேசத்தில் 7 இலட்சம் கிராமங்களில் பல கோடி ஆத்துமாக்கள் உண்டு. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஊழியராவது அந்த பிராந்தியங்களில் எழும்ப வேண்டும். தேவன் எங்கள் குடும்பத்திற்குத் தந்த தரிசனம் 7000 கிராமங்களில் வாழும் நம் முழு பீல் மக்களும் நம் தலைமுறையில் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே. 7000 கிராமங்களில் சபைகள் எழும்ப வேண்டும். 7000 பீல் சுதேச ஊழியர்கள் எழும்ப வேண்டும். அதற்காக அறுவடைக்கு எஜமானிடத்தில் வேண்டிக் கொள்ள வேண்டும். ஆம், அறுவடைக்கு எஜமான் இயேசு கிறிஸ்து பாரத தேசமெங்கும் காணும் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்ப, எழுப்ப ஆத்தும பாரத்துடன் ஜெபிப்போம்.

### 4. அறுவடையின் பலன்

**“விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான்.”** யோவான் 4 : 35 அறுவடையின் பலனை இயேசுகிறிஸ்து அழகாக விளக்குகிறார். அறுவடைக்கு முன்பாக விதைக்கிறவன், தண்ணீர் பாய்ச்சுகிறவன், உரமிடுகிறவன், காத்து வருபவன், அறுப்பவன் என்று பலர் பங்கெடுக்கிறார்கள். பவுல் கூறுகிறார் : **“நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும். மேலும் நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் கூலியைப் பெறுவான்”** 1 கொரி. 3 : 6–8

அது போலத்தான் ஆத்தும அறுவடைப் பணியில் வசனங்களை விதைப்பவர்கள் உண்டு. எங்கள் பீல் மக்கள் மத்தியில் 120 ஆண்டுகளுக்கு முன்பு அயர்லாந்து தேசத்திலிருந்து IP Mission மூலமாக, Jungle Mission மூலமாக மிஷனெரிமார்கள் வந்து வேத வசனங்களை கிராமம் கிராமமாக விதைத்தார்கள். அவர்களும் கோதுமை மணிகளாய் மரித்தார்கள். இன்று அதன் பலனாக ஷாலோம் ஊழியர்கள் மூலமாக அறுவடை செய்கிறோம்.

மட்டுமல்ல இந்த மாபெரும் ஆத்தும அறுவடைக்காக ஜெபிப்பவர்கள், தியாகத்துடன் காணிக்கை தந்து ஆலயங்களைக் கட்டி, ஊழியர்களைத் தாங்கி, ஆதிவாசி மாணவர்களைத் தாங்கி வரும் ஒவ்வொரு ஊழியர்களுக்கும், சபைகளுக்கும், விசுவாசக் குடும்பங்களுக்கும் தேவன் அதன் பலனைக் கட்டாயம் தருவார். அந்த பலன் நித்திய ஜீவனுக்காக நாம் பெற்றுக் கொள்ளும் பலன். நாம் ஆத்தும ஆதாய பணிக்காக, திரளாக விளைந்த அறுவடைக்காக, பணி செய்யும்போதும், ஜெபிக்கும் போதும், தாங்கும்போதும் நாம் நித்திய ஜீவனுக்குரிய பலனை சேர்த்துக் கொள்ளுகிறோம். தேவன் தாமே இவ்வசனங்கள் மூலமாக நம்மையும், நம் சபைகளையும், ஆசீர்வதித்து நம் தலைமுறையில் திரளான ஆத்துமாக்களை அறுவடை செய்ய கிருபை தருவாராக!

# ஷாலோம் பணித்தளங்களில்
# கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஊழியங்கள்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் பணித்தளத்தில் நடைபெற்ற ஊழியங்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

- ஜூலை 21–ம் தேதி இராஜஸ்தானில் கும்புரா பகுதியைச் சேர்ந்த சபைகளில் உள்ள பெண்களுக்கென்று விசேஷக் கூடுகை நடத்தப்பட்டது. இதில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள்.
- 23–ம் தேதி இராஜஸ்தானில் கதேடியா பகுதியைச் சேர்ந்த சபைகளில் உள்ள பெண்களுக்கென்று விசேஷக் கூடுகை நடத்தப்பட்டது. இதில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள்.
- 25–ம் தேதியன்று மத்தியப்பிரதேசம் அந்தர்வேலியா கம்பேஷன் பிராஜக்ட் வாலிபர்களுக்கென்று **“மாதிரியாயிரு”** என்ற தலைப்பில் ஒரு நாள் கூடுகை நடைபெற்றது. இதில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் ஷாலோம் பயிற்சி குழுவினர் சிறப்பாக நடத்த தேவன் கிருபை செய்தார். அநேக வாலிபர்கள் வசனத்தின் மூலம் தொடப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார்கள்.
- 26–ம் தேதியன்று இராஜஸ்தான் சபைகளில் உள்ள ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கென்று மாதாந்திர கூடுகை நடைபெற்றது.
- 29–ம் தேதியன்று குஜராத்திலுள்ள தாவடியா கிராம ஆலயம் புதிதாகக் கட்டப்பட்டு, தேவ நாம மகிமைக்காக **பேராயர். தேவதாஸ்** அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.
- ஆகஸ்டு மாதம் 1–ம் தேதியன்று இராஜஸ்தான்–1 ஊழியர்களுக்கென்று கொய்காவிலும், 4–ம் தேதி மத்தியப்பிரதேச ஊழியர்களுக்கென்று அந்தர்வேலியாவிலும், 5–ம் தேதி குஜராத் ஊழியர்களுக்கென்று தாகோத்திலும், 5–ம் தேதி இராஜஸ்தான் –2 ஊழியர்களுக்கென்று செவனியாவிலும் மாதாந்திர ஊழியர் கூடுகை நடைபெற்றது. இக்கூடுகைகளில் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியை அளித்தார்கள்.
- மேலும் 1–ம் தேதியன்று மூத்த சுதேச ஊழியர்களின் மனைவிமார்களுக்கென்று மாதாந்திர கூடுகை தாகோத்தில் நடைபெற்றது. **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள்.
- **சகோதரி. ஷெக்கினா** அவர்கள் விடுமுறையில் வந்திருந்தபோது, பணித்தளத்தில் ஒரு மாதம் இருந்து கூட்டங்களில் பங்கு பெற்று, தேவ நாமம் மகிமைக்காக சாட்சி பகிர்ந்தார்கள்.
- 2–ம்தேதி மத்தியப்பிரதேசத்திலுள்ள ராம்புரி கிராம ஆலயம் தேவ நாமம் மகிமைப்படும்படியாய் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள்.
- 6–ம் தேதி **சகோ. டைட்டஸ்** & **மெர்லின்** தங்களது 3–வது திருமண நாளைக் காண தேவன் கிருபை செய்தார்.
- 13–ம் தேதியன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள மசூரியா கிராம சபையில் காச்லா மற்றும் அதன் சுற்றுப்பகுதியிலுள்ள பெண்களுக்கான விசேஷக் கூடுகை நடைபெற்றது. இதில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள்.

## பத்து லட்ச ஆத்தும அறுவடைத் திட்டத்தின் மூலம் நடத்தப்படும் சுகமளிக்கும் ஆராதனைகளில் நிகழ்ந்த அற்புத சாட்சிகளில் ஒரு சில...



பெயர் : **சம்பா பேன்,** வயது: 17

ஊர் : சரக்கணி, இராஜஸ்தான்

எனது பெயர் **சம்பா பேன்.** நான் கடந்த சில மாதங்களாக மனநிலையால் பாதிக்கப்பட்டிருந்தேன். என்னை அறியாமலேயே ஊரெல்லாம் சுற்றித் திரிந்தேன். இந்நிலையில் எனது குடும்பத்தினர் சரக்கணி ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் அழைத்துச் சென்றார்கள். அங்கு ஊழியர் **பரம்சிங் பாபோர்** எனக்காக ஜெபித்த போது தேவன் எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். நான் இப்பொழுது தெளிவான மன நிலையில் இருக்கின்றேன். **சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!**

---



பெயர் : **முகேஷ் முனியா,** வயது : 14

ஊர் : பிலடி, இராஜஸ்தான்

எனது பெயர் முகேஷ் **முனியா.** நான் கடந்த 2 வருடங்களாக சுகவீனமாயிருந்தேன். எனது கை கால் வீங்கியிருந்தது. என்னால் விரல்கள் ஒட்டிப் போய் அசைக்கக் கூட முடியாத நிலையிலிருந்தேன். என்னால் எழும்பி நடக்கவும் முடியாது. இந்நிலையில் தாடுகா ஷாலோம் ஆலயத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்றேன். அங்கு ஊழியர் ஜெபித்த போது தேவன் எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இப்போது சரீரத்தில் இருந்த வீக்கமெல்லாம் மாறிவிட்டது. என்னால் நன்றாக நடக்க முடிகிறது. **எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

---



பெயர் : **கமலி பேன்,** வயது: 28

ஊர் : பிப்லா, மத்தியப்பிரதேசம்

எனது பெயர் கமலி பேன். நான் கடந்த 5 வருடங்களாக வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். எனது சரீரம் முழுவதும் வலி ஏற்படும். என்னால் ஒரு வேலையும் செய்ய முடியாது. சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் பிப்லா சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்றேன். அங்கு ஊழியர் எனக்காக ஜெபித்த போது தேவன் எனக்கு சுகத்தைக் கொடுத்தார். **எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

---

*....“அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்” -ஏசாயா 53 : 5*

# தமிழகத்தில் நடைபெற்ற இதர ஊழியங்கள்

**சென்னை வட்டாரா பிரதிநிதிகளுக்கான கூடுகை – 08.08.2015**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 08.08.2015 அன்று சென்னை திருமங்கலம் பகுதியிலுள்ள பென்டகன் ஹோட்டலில் வைத்து சென்னை வட்டார பிரதிநிதிகளுக்கான சிறப்புக் கூடுகை நடைபெற்றது. அநேக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நமது ஷாலோம் **பேராயர். வே. தேவதாஸ்** அவர்கள் சிறப்பு செய்தியளித்தார்கள்.

**மேற்கு சென்னை ஆதரவாளர்களுக்கான கூடுகை – 09.08.2015**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 09.08.2015 அன்று சென்னை, கெல்லிஸ் பகுதியிலுளள் St. Peter's Chuch –ல் மேற்கு சென்னை ஆதரவாளர்களுக்கான சிறப்பு குடும்பக் கூடுகை நடைபெற்றது. இதில் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டு, சிறப்பு செய்தியளித்தார்கள். கலந்து கொண்ட ஆதரவாளர்கள் தரிசனங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டனர்.

**சென்னை வட்டார போதகர்களுக்கான கூடுகை – 10.08.2015**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 10.08.2015 அன்று சென்னை, வில்லிவாக்கத்திலுள்ள ஷெக்கினா அசெம்ளி சபையில் வைத்து போதகர்களுக்கான சிறப்புக் கூடுகை நடைபெற்றது. இதில் சென்னை பகுதியிலுள்ள அநேக போதகர்கள் கலந்து கொண்டனர். இதில் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டு, சிறப்பு செய்தியளித்தார்கள். போதகர்கள் அனைவரும் ஷாலோம் ஊழியங்களைக் குறித்ததான தரிசனங்களைப் பெற்றுக் கொண்டதோடு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், ஊழியங்களைத் தாங்கவும் தங்களை அர்ப்பணித்தனர்.

**தென் சென்னை ஆதரவாளர்களுக்கான கூடுகை – 10.08.2015**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 10.08.2015 அன்று சென்னை, ஆதம்பாக்கத்திலுள்ள மேசியா இயேசு நம்மோடு சபையில் வைத்து தென் சென்னை ஆதரவாளர்களுக்கான சிறப்பு குடும்பக் கூடுகை நடைபெற்றது. இதில் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டு, சிறப்பு செய்தியளித்தார்கள். கலந்து கொண்ட ஆதரவாளர்கள் தரிசனங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டனர்.

**ஞாயிறு ஆராதனை – 09.08.2015, சென்னை**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 09.08.2015 அன்று சென்னை முகலிவாக்கத்திலுள்ள பெதஸ்தா மிஷன் ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது **பேராயர். வே. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு தேவ செய்தியளித்தார்கள். ஆராதனையில் தேவ மகிமை இறங்கி வந்தது. பேராயர் அவர்களை அழைத்துப் பயன்படுத்திய சபை போதகரம்மா **சுனிதா டேனியல்ராஜ்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஞாயிறு ஆராதனை & ஆலய பிரதிஷ்டை ஆராதனை – 16.08.2015, சென்னை**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 16.08.2015 அன்று சென்னை பெருங்குடியிலுள்ள AEVT ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனைகளிலும் (2 ஆராதனை) அன்று மாலை அதே ஆலயத்தில் நடைபெற்ற அந்த சபையின் 7வது ஆண்டு பிரதிஷ்டை ஆராதனையிலும் நமது **பேராயர். வே. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு தேவ செய்தியளித்தார்கள். ஆராதனை பேராயர் அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். பேராயர் அவர்களை அழைத்துப் பயன்படுத்திய சபை போதகர் **Pr. W.D. இம்மானுவேல்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 19.07.2015, V.K. புரம்**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 19.07.2015 அன்று V.K. புரம், காமராஜர்நகர் CSI கிறிஸ்து ராஜா ஆலயத்தில் நடைபெற்ற துதி ஆராதனையில் நமது ஷாலேம் தலைமை அலுவலக ஊழியர்கள் கலந்துக் கொண்டனர். இதில் **சகோ. ராஜமாணிக்கம்** அவர்கள் இசை மீட்ட **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளை நடத்தினார். **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் எழுப்புதல் என்ற தலைப்பில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். ஷாலோம் ஊழியர்களுக்கு வாய்ப்பளித்து பயன்படுத்திய சபை போதகர் **Rev. மதுரம்** அவர்களுக்காகவும், சபை ஊழியர் சகோ. அந்தோணி அவர்களுக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 26.07.2015, கொண்டபையன்பட்டி**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 26.07.2015 அன்று V.K. புரம், கொண்டபையன்பட்டி CSI St. Peter’s சபையில் நடைபெற்ற துதி ஆராதனையில் நமது ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர். இதில் ஷாலோம் ஊழியத்தின் சார்பாக **சகோ. ஜான்** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளை நடத்தியதோடு தேவனுடைய வார்த்தையையும் பகிர்ந்துக் கொண்டார்கள். மேலும் **சகோ. டேவிட்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். ஷாலோம் ஊழியர்களுக்கு வாய்ப்பளித்து பயன்படுத்திய சபை போதகர் அவர்களுக்காகவும், சபை ஊழியர் மற்றும் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

**ஞாயிறு மாலை ஆராதனை – 26.07.2015, தூத்துக்குடி**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 26.07.2015 அன்று மாலை தூத்துக்குடி கிருஷ்ணராஜபுரத்திலுள்ள எப்பத்தா சபையில் நடைபெற்ற ஞாயிறு மாலை துதி ஆராதனையில் நமது ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர். இதில் **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளை நடத்தினார். **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். ஷாலோம் ஊழியர்களுக்கு வாய்ப்பளித்து பயன்படுத்திய சபை போதகர் **Pr. சுந்தர்** அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 12.07.2015, கன்னியாகுமரி**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 12.07.2015 அன்று கன்னியாகுமரி குண்டால், CSI தேவாலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. செல்வதுரை** அவர்கள் கலந்து கொண்டு, ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்து கொண்டதோடு, தேவ செய்தியளித்தார்கள். ஷாலோம் ஊழியத்திற்கு வாய்ப்பளித்து, ஊழியரை பயன்படுத்திய சபை போதகர் **Rev. பிரைட்** அவர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 19.07.2015, பேரை, பாகோடு**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 19.07.2015 அன்று பேரை, பாகோடு, பெத்தேல் மிஷன் சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. செல்வதுரை** அவர்கள் கலந்துக் கொண்டு, ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்து கொண்டதோடு, தேவ செய்தியளித்தார்கள். ஷாலோம் ஊழியத்திற்கு வாய்ப்பளித்து, ஊழியரை பயன்படுத்திய சபை போதகர் **Pr. ஸ்டீபன்** அவர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 26.07.2015, முஞ்சிரை**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 26.07.2015 அன்று முஞ்சிரை, CSI தேவாலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. செல்வதுரை** அவர்கள் கலந்துக் கொண்டு, ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்து கொண்டதோடு, தேவ செய்தியளித்தார்கள். ஷாலோம் ஊழியத்திற்கு வாய்ப்பளித்து, ஊழியரை பயன்படுத்திய சபை போதகர் **Rev. ஞானதாஸ்** அவர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 16.08.2015, கன்னியாகுமரி**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 16.08.2015 அன்று கன்னியாகுமரி Jesus Akkini Jevali Mission சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. செல்வதுரை** அவர்கள் கலந்துக் கொண்டு, ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்து கொண்டதோடு, தேவ செய்தியளித்தார்கள். ஷாலோம் ஊழியத்திற்கு வாய்ப்பளித்து, ஊழியரை பயன்படுத்திய சபை போதகர் **Pr. பிரான்சிஸ்** அவர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறோம்.

### *உங்களுக்காக ஜெபிக்கிறோம்...*



**அன்பான ஆதரவாளர்களே!** உங்களுக்காகவும் உங்களது குடும்பத்திற்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் உங்களது ஜெபக் குறிப்புகளை **அன்பு பகிர்வு இயக்கம்** தலைமை அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்தினால் நாங்கள் உங்களுக்காக விசேஷமாக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

**தொடர்புக்கு : போன் : 9698044522**

# ஷாலோம் ஊழிய வெள்ளிவிழா ஆண்டு

## சிறப்பு பணிகளும் திட்டங்களும்


சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள்

தேவ கிருபையால் ஆபிரகாமைப் போல் தேவன் ஒரே குடும்பமாக எங்களை 1991 ஜுலை மாதம் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தரிசனம் தந்து அழைத்து சென்றார். இன்று 24 ஆண்டுகள் கர்த்தர் எங்களுடன் இருந்து அற்புத அடையாளங்களுடனும் அவருடைய சித்தப்படி 580 பீல் சுதேச ஊழியர்களையும், 660க்கும் அதிகமான சபைகளையும்; 25,000க்கும் அதிகமான விசுவாச குடும்பங்களையும் தந்துள்ளார். தேவனுக்கே மகிமை !

இந்த 25ம் வெள்ளிவிழா ஆண்டில் அனைத்து பீல் சுதேச ஊழியர்கள் ஆளுக்கொரு புதிய சுதேச ஊழியர்களை எழுப்பவும்; ஒரு புதிய சபையை உருவாக்கவும்; ஒவ்வொரு சபையில் உள்ள விசுவாசி குடும்பங்கள் குறைந்தது 5 குடும்பங்களை இயேசுவண்டை வழி நடத்தவும் தீர்மானித்து ஜெபித்து செயல்பட எங்களுடன் அர்ப்பணித்து உள்ளார்கள். ஆகவே 25ம் ஆண்டு முடிவடையும் போது 2016 இறுதிக்குள் 1000 பீல் சுதேச ஊழியர்கள்; 1000 கிராம சபைகள் மற்றும் ஒரு இலட்ச விசுவாச குடும்பங்களை தேவ நாம மகிமைப்பட பெற்றுக் கொள்வோம் என விசுவாசிக்கிறோம். ஆகவே இந்த ஆண்டின் ஊழியங்களுக்காக, சிறப்பு திட்டங்களுக்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

### 2016ம் ஆண்டு இறுதிக்குள்

- 400 புதிய பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும், அவர்களுக்கு பயிற்சி கொடுத்து உருவாக்க வேண்டும்.
- 400 புதிய சபைகள் எழுப்பப்பட வேண்டும்.
- 250 புதிய ஆலயங்கள் கட்டப்பட வேண்டும்.
- 7000 மூப்பர்களுக்கான சிறப்பு அபிஷேக முகாம்கள் நடத்தப்பட வேண்டும். (பகுதிவாரியாக)
- 10.000 வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்கள் நடத்தப்பட வேண்டும். (பகுதிவாரியாக)
- 1000 சபைகளில் உள்ள ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு ஓய்வுநாள் பாடசாலை, சிறுவர் முகாம்கள், விடுமுறை வேதாகம பள்ளிக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.
- பெண்களுக்கான சிறப்பு அபிஷேக முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.
- பீல் மக்கள் இரட்சிப்புக்காகவும்; தேசத்தின் எழுப்புதலுக்காகவும் 24 மணி நேர ஷாலோம் ஜெப கோபுரம் மற்றும் ஜெப சேவை மையம் உருவாக்கப்பட வேண்டும்.

- குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் திருச்சபை ஒருங்கிணைப்பு பணிகளுக்கான சிறப்புப் பயிற்சி மற்றும் 3 திருமண்டலங்களை (Diocese) ஏற்படுத்தும் சிறப்புப் பணிகள் நடத்தப்பட வேண்டும்.

## மூன்று மாநிலங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள்

- 1000 புதிய ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வி பணிக்கு உதவுதல்.
- சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுதல்.
- ஆரம்ப சுகாதார கல்வி பயிற்சி சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கு வழங்குதல்.
- 100 புதிய கிராமங்களில் ஆழ்குழாய் குடிநீர் வசதி உருவாக்குதல்.
- 12000 எழுதப்படிக்க தெரியாத விசுவாசிகளுக்கு முதியோர் கல்வித் திட்டத்தை செயல்படுத்துதல்.
- 200 சுதேச ஊழியர்களுக்கு B.Th. படிப்பிற்கான ஏற்பாடுகளை செய்தல்.
- 1000 சபைகளுக்கான Shalom Literature Centre உருவாக்குதல்.
- 25,000 வேத புத்தகங்கள் குறைந்த விலையில் வழங்குதல்.
- மாதந்தோறும் 50 மையங்களில் சிறப்பு உபவாச கூடுகைகள், அற்புத சுகமளிக்கும் கூட்டங்கள்; பகுதிவாரியான எழுப்புதல் கூட்டங்களை நடத்துவது.
- இயேசு திரைப்பட ஊழியங்கள் மூலம் 1000 கிராமங்களை சந்திப்பது.


## மேற்கண்ட திட்டங்களை நிறைவேற்ற

- ரூ. 2500 மாதந்தோறும் கொடுத்து ஜெபித்து தாங்கும் சுதேச ஊழியர் ஆதரவாளர்கள் 400 பேர்கள் தேவை.
- ரூ. 5 இலட்சங்கள், ரூ. 3 இலட்சங்கள், ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து 250 ஆலய கட்டுமான நிதி ஆதரவாளர்கள் தேவை.
- ரூ. 150 வீதம் 25 ஆயிரம் வேதாகமங்களைக் கொடுக்கும் ஆதரவாளர்கள் தேவை.
- ரூ. 500, ரூ.1000 மாதந்தோறும் ஜெபித்து கொடுத்து உதவும் ஷாலோம் மிஷனெரி பணி பங்காளர்கள் 3000 பேர்கள் தேவை.
- ரூ. 40,000 செலவில் இயேசு திரைப்பட ஊழியத்திற்கு 12 LCD புரொஜக்டர்கள் தேவை.
- 1000 ஆதிவாசி மாணவர்களுக்கு ரூ. 700 மாதந்தோறும் கொடுத்து ஜெபித்து தாங்கும் ஆதரவாளர்கள் தேவை.

தேவன் தந்த திறந்த வாசல் மற்றும் திரளான அறுவடையை பெற்றுக் கொள்ள அறுவடை பணியின் பங்காளர்களாக ஜெபித்து தாங்க முன் வாருங்கள். எந்த காரியத்திற்காக காணிக்கை கொடுக்கிறீர்களோ அதற்கான சிறப்பு அறிக்கையுடன் தேவையான புகைப்படங்கள், வீடியோ, சி.டி. அனுப்பி வைக்கப்படும். 2020க்குள் முழு பீல் மக்களும் இரட்சிக்கப்பட குடும்பமாக, சபையாக, ஊழிய ஸ்தாபனங்களாக, ஜெபக்குழுவாக தாங்க முன்வாருங்கள். மற்றவர்களுக்கு இந்த தரிசனப் பணியை இம்மலர் மூலமாக அறிமுகப்படுத்துங்கள், முடியுமானால் ஷாலோம் பிரதிநிதியாக செயல்பட முன் வாருங்கள்.

## வெள்ளி விழா ஆண்டு சிறப்பு கட்டிடப் பணி திட்டங்கள்

### ஷாலோம் பவன் (Shalom Bhavan)



தேவ கிருபையால் உருவாக்கப்பட்ட 25 வருட பணிகளை நிர்மானிக்கவும் செயல்படுத்தவும் குஜராத்தில் தாகோத்தில் பணித்தள அலுவலகம் உள்ளது. இந்த கட்டிடம் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடமாகும். சுமார் 4000 சதுர அடி நிலத்தில் அமைந்துள்ளது. இதை உடைத்து விட்டு புதிய அலுவலக கட்டிடத்தை எழுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இந்தக் கட்டிடம் இல்லாமல் மூன்று இடங்களில் வாடகை கட்டிடங்களில் பல பணிகள் நடந்து வருகிறது.

- 3 மாநில திருச்சபைகளுக்கான (Synod Diocese Network) ஒருங்கிணைப்பு அலுவலகம் சபை வளர்ச்சிக்கான திட்ட மையம்
- ஊழியர் பயிற்சி, வேதாகமப் பயிற்சி, ஓய்வுநாள் பள்ளி பயிற்சி, CBC (VBS) பயிற்சி போன்ற அனைத்து Training Programmes.
- Finance Department
- சுதேச ஊழியர்கள், ஆதிவாசி மாணவர்கள், சபை கட்டுதல் போன்ற அனைத்து ஊழியங்களுக்கான ஆதரவாளர்கள் அறிக்கை மொழியாக்கம் செய்து தமிழ், ஆங்கிலத்தில் Type செய்து அனுப்பும் Sponsor Related Dept.
- மாத பத்திரிகைக்கான செய்திகளை அனுப்பும் Communication Department.

  1000 திருச்சபைகளுக்கும், விசுவாச குடும்பங்களுக்கு தேவையான வேதாகமம், வசனங்கள் CD/ VCD போன்ற பொருட்களை வழங்க Shalom Literature Service Department.
- 24 மணிநேர ஜெப சேவை மற்றும் பீல் மக்கள் எழுப்புதல், தேசத்தின் எழுப்புதலுக்கான (விடுதலைக்காக ஜெபிக்க வருவோர்; ஆலோசனைக்காக வருபவர்களை சந்திக்க) ஷாலோம் ஜெப மையம்.
- பீலி, பிலோடி, வாகுடி, ஹிந்தி, குஜராத்தி மொழிகளில் பாடல்கள், செய்திகள் Audio / Video மூலம் தயாரித்தலும், 1000 சபைகளுக்கு வழங்கவும், ஷாலோம் முன்னேற்ற பணிகளுக்காக குறிப்பாக Sponsor–க்கு அனைத்து ஊழிய அறிக்கைகளை Photo / DVD மூலம் அனுப்ப Shalom Media Department.
- Gen. Admin; Hospitality for Visitors; Maintenance போன்ற பணிகள்.
- ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் கல்விப்பணி, முன்னேற்றப் பணிகள் Compassion Projects / Health Projects கண்காணிக்கப்பட அமைத்தல்.

- போதகர்கள், தலைவர்கள், மூப்பர்கள் போன்ற 100 பேர்கள் கூடி ஜெபிக்க, ஆலோசிக்க Conference Hall கட்டப்பட வேண்டும்.
- பேராயர் மற்றும் பேராயர் அம்மா அவர்களுக்கான அலுவலக அறைகள்.
- மேலும் இதர பணிகள்....

அனைத்தும் நிறைவேற்றப்பட Car & Two Wheeler Parking வசதிகளுடன் கூடிய Ground floor –ருடன் சேர்த்து குறைந்தது 3 அடுக்குமாடி கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

## அந்தர்வேலியா ஷாலோம் பயிற்சி மையம்

இந்நாட்களில் மத்தியப்பிரதேசத்தில் பீல் மக்கள் மத்தியில் எழுப்புதலை கட்டளையிட்டு வருகிறார். ஊழியர்கள் கூடுகை, மூப்பர்கள் கூடுகை, வாலிபர் கூடுகை, சிறுவர்கள் முகாம், எழுப்புதல் முகாம்கள், ஜெபமுகாம்கள் மற்றும் பகுதிவாரிய திட்டக்கூடுகைகளை நடத்த அந்தர்வே–லியா கிராமத்தில் தேவன் நமக்கு சுமார் 2 ஏக்கர் நிலத்தை தந்துள்ளார்.



அங்கு 120 X 40 அளவில் Hall ஒன்றும் மேலும் தேவையான அறைகள் கட்டப்பட Compound wall கட்டப்பட இரண்டு ஊழியர்கள் தங்கியிருக்க, ஜெப ஊழியங்கள் நடத்தப்பட கட்டிடங்கள் எழுப்பப்பட வேண்டும்.

## ஷாலோம் ஆதிவாசி மாணவர் விடுதி ஹரிநகர் மத்தியப்பிரதேசம்

மத்தியப்பிரதேசத்தில் ஹரிநகர் கிராமத்தில் அமைந்துள்ள Mont Fort English Medium School –ல் சுமார் 25 கி.மீ. சுற்றுவட்டாரத்தில் இருந்து ஊழியர்களின் பிள்ளைகள் சுமார் 60 பேர்கள் படித்து வருகிறார்கள். தற்போது சிறிய வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து அதில் இந்த 60 மாணவர்களையும் தங்க வைத்து படிக்க வைத்து வருகிறோம். இந்தப் பிள்ளைகளுக்கு சரியான ஹாஸ்டல் கட்டிடம் மாணவர்களுக்கு மற்றும் மாணவிகளுக்கு தனித்தனி அறைகள், இரண்டு வார்டன் அறைகள், சமையல் அறை, உணவருந்தும் அறை, படிப்பதற்கான அறை மற்றும் கழிவறைகளுடன் கூடிய ஷாலோம் ஆதிவாசி மாணவர் விடுதி கட்டப்பட வேண்டும்.

## ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி பிஜல்பூர் இராஜஸ்தான்

தேவ கிருபையால் 30 பிள்ளைகளுடன் சிறிய வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஷாலோம் பள்ளி இன்று இராஜஸ்தானில் பிஜல்பூர் கிராமத்தில் 1 முதல் 8 வரை வகுப்புகள் நேர்த்தியாக நடைபெற்று வருகிறது.




குறிப்பாக நம் இராஜஸ்தான் ஊழியர்கள், மூப்பர்கள் பிள்ளைகள் 300க்கும் அதிகமாக படித்து

வருகிறார்கள். கட்டப்பட்ட சிறிய அறைகளில் தான் பள்ளி வகுப்புகள் உள்ளது. பகலில் வகுப்பறையாகவும் இரவில் தங்கும் அறையாகவும் உபயோகித்து வருகிறார்கள். வெள்ளிவிழா ஆண்டில் பள்ளிக்கூடத்துக்கு 10 அறைகள் மற்றும் 100 பெண் பிள்ளைகளுக்கான விடுதி அறைகள் கட்டப்பட வேண்டும்.

**மேற்கண்ட 4 வெள்ளி விழா திட்டங்களை நிறைவேற்ற குறைந்தது ரூ. 300 இலட்சங்கள் தேவைப்படுகிறது. குறிப்பாக :**

- **ரூ. 1 இலட்சம் ஜெபித்துக் கொடுக்கக்கூடிய 300 ஆதரவாளர்கள் அல்லது**
- **ரூ. 50 ஆயிரம் ஜெபித்துக் கொடுக்கக் கூடிய ஆதரவாளர்கள் அல்லது**
- **ரூ. 20 ஆயிரம் ஜெபித்துக் கொடுக்கக் கூடிய ஆதரவாளர்கள் அல்லது**
- **10 ஆயிரம் ஜெபித்துக் கொடுக்கக் கூடிய ஆதரவாளர்கள் அல்லது**
- **தங்களால் முடிந்த காணிக்கையைக் கொடுக்கக் கூடிய ஆதரவாளர்கள் தேவை**

நீங்கள் குடும்பமாக, குழுவாக, ஊழியங்களாக, சபைகளாக தேவன் எழுப்பும்படியாக ஜெபித்து தாங்க முன் வாருங்கள். மட்டுமல்ல மாபெரும் வெள்ளிவிழா திட்டத்திற்கென உங்களால் முடிந்த நிதி உதவியை காணிக்கையாக ஜெபித்து அனுப்புங்கள்.

நிதி உதவி அனுப்பும்போது **"ஷாலோம் வெள்ளிவிழா திட்டத்திற்கான நிதி உதவி"** என குறிப்பிட்டு அனுப்பவும். குறிப்பாக ஜெபித்து கொடுக்கக்கூடிய புதிய ஆதரவாளர்களை அறிமுகம் செய்து கரம் கொடுக்க முன் வாருங்கள்.

**"....எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்லவேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்." நெகே. 2:18**

## முகவரி மாற்றங்களைத் தெரியப்படுத்துங்கள்

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாகத் தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும்.

மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குக் கிடைத்தவுடன் உங்களுக்கு SMS மூலம் செய்தி தெரிவிக்கப்படும். தொடர்புக்கு : 9698144522



# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதப்புத்தகங்கள் வழங்குவோம்

**"கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று" – அப். 13:49.**

கைகளில் வில் அம்புகளை வைத்துக்கொண்டு திருடியும், கொள்ளையடித்தும், சாராயத்தை காய்ச்சி குடித்தும், மந்திரப் பூஜைகள் செய்து பிசாசின் பிடியிலும், அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்த பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் தரிசனப் பணிகளை தேவன் கொண்டு வந்தது மட்டுமல்ல, மகத்துவமான காரியங்களையும் செய்திருக்கிறார்.

கடந்த 24 ஆண்டுகளில் 500 க்கும் மேற்பட்ட பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும் அவர்கள் மூலமாக 600 க்கும் மேற்பட்ட சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள். ஒவ்வொரு கிராம விசுவாசிகள் எங்களிடம் இந்த கறுப்புக் கலர் புத்தகம் என்னவென்று ஆவலாய் கேட்பார்கள். மேலும் எங்களுக்கு ஒன்று தாருங்கள் என கேட்டு வேதாகமத்தை வாங்கி பயபக்தியுடன் அரவணைத்து வைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு இலவசமாக வேதாகமத்தைக் கொடுக்காமல் ரூ. 200/– மதிப்புள்ள வேதாகமத்தை குறைந்த விலையாக ரூ. 50/–க்குக் கொடுத்து வருகிறோம்.

இன்னும் இந்த வெள்ளி விழா ஆண்டு இறுதிக்குள் **10000 வேதப்புத்தகங்கள்** குஜராத்தி, ஹிந்தி மொழியில் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதப்புத்தகத்தின் விலை ரூ. **150**/- வீதம் **10000** வேதப்புத்தகங்கள் வாங்கி விசுவாசிகளுக்கு விநியோகம் செய்ய ஆதரவாளர்கள் தேவை. கிராமங்களில் வாழும் பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதப்புத்தகம் வழங்க தேவ ஜனங்களாக, குடும்பமாக, சபையாக முன் வாருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!



**கடந்த ஆண்டு பீல் ஆதிவாசி சபைகளுக்கு ஜெபித்து வழங்கப்பட்ட வேதாகமங்கள்**

## குஜராத் பணித்தள அலுவலகத்தில் தேவனுடைய ஊழியம் செய்ய ஊழியர்கள் தேவை

*தேவ கிருபையினால் கடந்த 24 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது. பணித்தளங்களில் சுவிசேஷம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்கும் பணியில் தேவன் பீல் ஆதிவாசி ஜனங்களை வல்லமையாக பயன்படுத்தி வருகிறார். ஆனால் ஆகவே குஜராத் பணித்தள அலுவலகத்தில் பணிபுரிய நமக்கு ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்.*

1. **Accounts Department. (B.Com., with Tally)**
2. **Media Department. (Audio, Video - Shooting & Editing)**
3. **Communication Department. (Tamil & English Typing** தெரிந்தால் நல்லது**)**
4. **Magazine Department. (Tamil & English Typing** தெரிந்தால் நல்லது**)**
5. **Literature Department.**
6. **Maintanance Department.**
7. **மிஷன் இல்லத்தில் சமையல் பணி செய்ய (ஆண் அல்லது பெண்)**

இந்தப் பணிகளைச் செய்ய ஊழியர்கள் (சகோதரர்கள், சகோதரிகள் & திருமணமான தம்பதிகளானாலும் குடும்பமாக) நமக்கு உடனடியாக தேவைப்படுகிறார்கள். ஆகவே ஊழியத்திற்கு அர்ப்பணித்து, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இருப்பீர்களானால் எங்களோடு தொடர்பு கொண்டு உங்களது Bio-Data வை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். மேலும் உங்களுக்குத் தெரிந்த நபர்கள் ஊழிய வாஞ்சையுடன் இருந்தால் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம். குறிப்பாக போதகர்கள் தங்கள் சபைகளில் ஊழிய வாஞ்சையோடு இருக்கும் சகோதர சகோதரிகளை அறிமுகப்படுத்த வேண்டுகிறோம். தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். மேலும் தொடர்புக்கு : **சகோ. சாம் குணசீலன்,** செல் போன் : 9345675468

**"அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்." மத்தேயு 9:37**

**தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும்**

## வாக்குத்தத்த உபவாச ஜெபக் கூடுகை

நாள் : **01.09.2015 (செவ்வாய் கிழமை)** நேரம் : **காலை 9.15 முதல் 1.00**

தேவச் செய்தி : ***Prof. C.S.* கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

New No. 5A/323, Old.No. 5/168, கால்டுவெல் காலனி 3 வது தெரு, தூத்துக்குடி – 628 008.

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 25

**பதில் எழுதுக :**

1. யார் இனி மரிப்பதில்லை?
2. எலும்புகளை புஷ்டியாக்குவது எது?
3. வலு சர்ப்பங்களின் தாபரம் எது?
4. வார்த்தைகளை கேட்டவுடன் ஜீவனை விட்டது யார்?
5. கண், ஆத்துமா, வயிறு எதினால் கருகிப் போகும்?
6. செப்பனியா தீர்க்கதரிசியின் தாத்தா யார்?
7. யாரைக் கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள்?
8. தெபோராளின் கணவன் யார்?
9. யார் பாக்கியவான்களென்று வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டுள்ளது?
10. மிகுந்த ஆதாயம் எது?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.09.2015**

**கடந்த ஜூலை மாத வேத வினா போட்டி எண் 24க்கான சரியான விடைகள் :**

1. சமுத்திரக்கால் – நாகூம் 3 : 8
2. அகாஸ்வேரு – எஸ்தர் 1 : 5
3. தாழ்மை – நீதி. 15 :33. 18 : 12
4. சிபியாள் – 2 இராஜா. 12 : 1
5. தேவனுடைய வீடு. ஆதி. 28 : 17–19
6. சங்கீதம் – 36 : 8
7. கிறிஸ்துவையும் சபையையும் பற்றியது. – எபே. 5 : 32
8. விக்கிரகாராதனைக்காரன்.–எபே.5 : 5
9. பரலோகத்தில் – பிலி. 3 : 20
10. போசேஸ், சேனே. – 1 சாமு. 14 : 4

**கடந்த ஜூலை மாத வேத வினாப் போட்டி எண் 24 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis.** லில்லியன் ஜோசப், புதுடில்லி. **2. Sis.** சுகந்தலெட், K.K. Dist.
**3. Sis.** பியூலா ஜெசுராஜ், பாண்டிச்சேரி

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468



# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

தேவனுடைய பெரிதான கிருபையினால் இதுவரை சுமார் 1.5 இலட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச்சபையில் சேர்ந்துள்ளார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றவர்கள் வாரந்தோறும் 660 கிராமங்களில் கூடி ஆராதிக்கிறார்கள். இதுவரை 303 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 20.11.2009 அன்று தேவக் கிருபையால் திருச்சபைகள் திருமண்டலமாக (Shalom Diocese In India) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தேவனுக்கே மகிமை!

## செய்யவேண்டிய வேலையோ மிகப் பெரியது

தேவக் கிருபையால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட 580 க்கும் அதிகமான நம் பீல் சுதேச மிஷனெரிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் நற்செய்தியை அறிவித்து பாவங்கள், சாபங்கள் நோய்களிலிருந்து மக்கள் திரளாக கிராமம் கிராமங்களாய் இயேசுவைச் சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள்.

660 க்கும் அதிகமான கிராமங்களில் சபைகள் கூடி ஆராதனை நடைபெற்று வருகிறது. இந்த வருடத்தில் குறைந்தது 100 கிராமங்களில் ஆலயங்களைக் கட்ட, திறந்த வாசல்களையும், வாய்ப்புகளையும் தேவன் தந்துள்ளார்.

மேலும் 7000 கிராமங்களில் வாழும் பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க விசேஷ அபிஷேகம் பெற்ற 48 சுதேச ஊழியர்கள் 12 குழுக்களாக மாதந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை 48 கிராமங்களில் நடத்துகிற நற்செய்திக் கூட்டங்கள் மூலமாக தேவன் பல அற்புத அடையாளங்களை நடத்தி வருகிறார். அதன் மூலமாக ஒவ்வொரு மாதமும் பல நூறு குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

25 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு 7 மூப்பர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சுதேச ஊழியர் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்டுவதற்குக் கொடுக்க முன் வருகிறார்கள். குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் 30 x 18, 40 x 20, 50 x 20 அளவுகளில் முறையே 2 இலட்சங்கள், 3 இலட்சங்கள் 5 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து ஆலயம் கட்டித் தரும் ஆதரவாளர்கள் தேவை. நீங்கள் சபையாக, குழுவாக, குடும்பமாகக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.



*பணித்தளங்களில் கட்டப்பட்டுவரும் கிராம ஆலயங்களில் ஒரு சில*

**2016 ஆம் வருடத்தில் (வெள்ளி விழா ஆண்டில்) 250 கிராம ஆலயங்களைக் கட்டி எழுப்ப**

ரூ. 5 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 50 பேர்கள்

ரூ. 3 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 100 பேர்கள்

ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 100 பேர்கள்

---

*அல்லது* **ரூ. 1 இலட்சம், ரூ. 50,000 ரூ. 20,000, ரூ. 10,000**

நிதி உதவிகளைத் தரும் ஆதரவாளர்களாக இணைந்து
பணித்தளங்களில் ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்

- **உங்கள் சபையின் சார்பிலோ, உங்கள் குடும்பத்தின் சார்பிலோ ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**
- **மேலும் உங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு இந்த மிஷனெரி ஊழியத்தினை அறிமுகம் செய்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

**ரூ. 5 இலட்சங்கள், ரூ. 3 இலட்சங்கள், ரூ. 2 இலட்சங்கள் மற்றும் ரூ. 1 இலட்சம்** கொடுக்கக்கூடிய ஆதரவாளர்களுக்கு
தனி கிராம ஆலயம் கொடுக்கப்பட்டு, ஆலய பிரதிஷ்டை DVD மற்றும் புகைப்படங்கள், அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.
மற்ற நிதியாளர்களுக்கு இணைந்து கட்டப்பட்ட ஆலயத்தின் படங்கள், DVD மற்றும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.

நிதி உதவி அனுப்பும் போது **Sharing Love Mission** என்ற பெயருக்கு (Tuticorin Branch) D.D. or Cheque எடுத்து
ஷாலோம் கிராம ஆலய கட்டுமானப் பணிக்கான சிறப்பு நிதி என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம்.
மேலும் எங்கள் அலுவலகம், முன்னேற்றப் பணியாளர்கள், பிரதிநிதிகளிடம் கொடுத்து ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHARING LOVE MISSION (Tuticorin Branch)** |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | **106100710400009 (I F S Code : TMBL0000106)** |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | **105010100094373 (IFS Code : UTIB0000105)** |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | **613901112799 (IFS Code : ICIC0006139)** |

# ஜெபக்குறிப்புகள்...



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...**

◎ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஊழியங்களுக்காக...**

◎ 660க்கும் அதிகமான சபைகளுக்காக, 303க்கும் அதிகமான ஆலயங்களில் நடைபெற்று வரும் ஆராதனை மற்றும் இதர ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ மூப்பர், பெண்கள், ஊழியர்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வாலிபர் மற்றும் சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஓய்வு நாள் பள்ளிகள், CBC ஊழியங்கள் சிறுவர் மற்றும் வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வெள்ளிதோறும் நடைபெறும் அற்புத சுகமளிக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக...**

◎ **பேராயர் தேவதாஸ்** மற்றும் அவரது மனைவி **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோருக்காகவும், தேவன் அவர்களுக்கு முழு பீல் மக்களுடைய இரட்சிப்பின் பணியில் தம்முடைய திட்டங்களையும் தரிசனங்களையும் தரவும், அவற்றை செயல்படுத்த நல்ல ஞானத்தையும், சுக, பெலன், ஆரோக்கியத்தினை தரவும், போக்கையும் வரத்தையும் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

◎ Compassion Project மற்றும் Shalom Charity Mission ஆகியவற்றை நிர்வகிக்கும்படியாக பொறுப்பேற்றுள்ள **சகோ. டைட்டஸ்** மற்றும் **மெர்லின்** அவர்களையும், பேராயர் அவர்களின் பேரன் **Zion Kryston** க்காகவும், M.A. (Media) பயின்று வரும் **சகோ. ஷாலோம்** அவர்களையும் தேவன் ஆசீர்வதித்து உருவாக்க ஜெபியுங்கள்.

◎ ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு பயின்று வரும் சகோதரி ஷெக்கினா அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், படிப்பினை முடித்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஊழியர்களுக்காக...**

◎ 580 க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களுக்காகவும் அவர்கள் குடும்பத்திற்காகவும், தேவன் அவர்களை வல்லமையாகப் பயன்படுத்தவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்களது பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

◎ பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் சுவிசேஷ ஊழியம், Compassion Project மற்றும் Training Unit –ல் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும், தேவன் அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், கிருபையையும் தந்து ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

- தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பாதுகாவலுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷன்...**

- ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் பீல் ஆதிவாசி ஜனங்களின் கல்வி, மருத்துவம், குடிநீர் வசதிகளுக்காகவும், பொருளாதார முன்னேற்றப் பணிகளுக்காகவும், நம் ஊழியத்தை செய்கிற தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.
- ஷாலோம் விடுதிகளில் தங்கி பயின்றுவரும் 1248க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காகவும், அவர்களை தேவன் ஆசீர்வதித்துப் பாதுகாக்கவும், நல்ல ஞானத்தையும், சுகம், பெலனையும் தேவன் சிறுவர்களுக்குக் கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.
- Teacher Training, Engineering, Medical & ITI போன்ற உயர்கல்வி கற்கவிருக்கும் பிள்ளைகளுக்காகவும், அவர்களின் கல்வித் தேவைகளை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.
- எதிர்காலத்தில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு தேவன் நல்ல வேலை வாய்ப்பினைத் தந்து சமுதாயத்தில் உயர்த்தி ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**ஷாலோம் திருமண்டலத்திற்காக...**

- ஷாலோம் திருமண்டலத்தின் கீழ் இயங்கி வரும் திருச்சபை பணிகளுக்காக, திருச்சபை ஒருங்கிணைப்பு பணிகளுக்காக ஜெபியுங்கள்.
- இதுவரை கட்டப்பட்டுள்ள 303 கிராம ஆலயங்களுக்காக, திருச்சபைகள் வளர்ந்து பெருகவும் அநேக ஆத்துமாக்கள் திருச்சபைக்கு வரவும், திருச்சபையில் தேவன் அநேக அற்புத அடையாளங்கள் செய்யவும் ஜெபியுங்கள்.
- கட்டப்பட்டு வரும் கிராம ஆலயப் பணிகள் தடைகளின்றி நிறைவு பெறவும், ஆலயம் அவசியமாகத் தேவைப்படும் கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்படவும், அதற்கான ஆதரவாளர்கள் கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் அற்புதத்தின் நாள்...**

- செப்டம்பர் மாதம் 25ம் தேதி வெள்ளிக்கிழமை நமது பணித்தளத்திலுள்ள அனைத்து சபைகளிலும் ஷாலோம் அற்புதத்தின் நாள் ஆசரிக்கப்பட உள்ளது. அந்நாளில் தேவன் பல ஆயிரம் அற்புதங்களை சுதேச ஊழியர்கள் மூலம் நடப்பிக்கவும், அநேக ஆயிரம் குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும் விசேஷமாக ஜெபியுங்கள்.

**ஷாலோம் மிஷன் ஞாயிறு...**

- இவ்வருடம் **ஷாலோம் மிஷன் ஞாயிறு** மூன்று மாநிலங்களிலும் கொண்டாட தீர்மானித்து ஜெபித்து செயல்பட்டு வருகிறோம். தேவன் இந்த மிஷன் ஞாயிறை ஆசீர்வதிக்கவும் ஷாலோம் சபைகள் ஸ்திர சபைகளாக, ஜெபிக்கும் சபைகளாக, ஆத்தும ஆதாயம் செய்யும் சபைகளாக, தேவனுக்காக கொடுக்கும் சபைகளாக விளங்க ஜெபியுங்கள்.

## ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

| | |
|---|---|
| **CHENNAI BRANCH OFFICE**<br>**Bro. John Jeyasingh**<br>No.102-2nd Main Road<br>Sathya Nagar, Padi,<br>CHENNAI - 600050.<br>Cell : 9698244577 | **MARTHANDAM BRANCH OFFICE**<br>**Bro. Selvadurai.G**<br>Bethel,<br>25-7/A 1-Block 25, Paruthivilai,<br>Kannakode, Marthandam - 629165<br>Cell : 9487689869 |
| **MUMBAI BRANCH OFFICE**<br>**Bro. Prabhakaran. P.**<br>C/o. Mr. P.Immanuel,<br>C-2, Plot No.123-Old Mhada Colony,<br>Mangalya Co.Op.Society Ltd,<br>Pokharan Road No.2,<br>Thane West - 400610<br>Cell : 9768282699 | **NAGERCOIL BRANCH OFFICE**<br>**Bro. Robinson. S.**<br>Ebenezer Plaza, Parama Street,<br>WCC Junction,<br>Nagercoil - 629001<br>Cell : 9688144522 |
| **MADURAI BRANCH OFFICE**<br>**Bro. Chandra Paul. S**<br>6/3, Nellaiappar Puram 7th Street,<br>Tirunagar (p.o)<br>MADURAI-625006<br>Cell : 9698644522 | **TIRUNELVELI BRANCH OFFICE**<br>**Bro. David. R**<br>56 A/4,-C.S.I Church South Street,<br>(Upstairs) STC road,<br>Perumalpuram, Palayamkottai<br>TIRUNELVELI-627007<br>Cell 9698844599 |

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

AXIS BANK

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- ❖ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- ❖ எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

AXIS BANK **A/c. No. : 105010100094373 (IFS Code : UTIB0000105)**

---

ICICI Bank **A/C. No. 613901112799 (IFS Code : ICIC0006139)**

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : **9698244522**

ஈராக் தலைநகர் பாக்தாத் அருகே பக்குவா நகரிலுள்ள மார்க்கெட் பகுதியில் சக்திவாய்ந்த வெடிகுண்டு கடந்த மாதம் வெடித்ததில் 35 பேர் உடல் சிதறி பலியாயினர். 70க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இத்தாக்குதல் நடந்த சிறிது நேரத்தில் கானான் என்ற கிராமத்தில் மற்றொரு குண்டு வெடித்தது. இதில் 7 பேர் பலியாயினர்.

---

பூமியில் இருந்து பார்த்தால் தெரியாத நிலவின் இருண்ட பாகத்தை நாசாவின் செயற்கை கோள் படம் பிடித்துள்ளது. நாசாவின் "டீப்ஸ்பேஸ் க்ளைமேட் அப்சர்வேட்டரி" என்ற செயற்கை கோள் 10 லட்சம் மைல் தூரத்தில் இருந்து கொண்டு கடந்த மாதம் நிலவின் இருண்ட பாகத்தை பூமியின் பின்னணியத்தில் படம் எடுத்துள்ளது. இந்த சாதனையை மேற்கொள்ள அந்த செயற்கைகோளில் பொருத்தப்பட்டிருந்த "எர்த் பாலிக்ரோமேடிக் இமேஜிங் கேமரா மிக முக்கியமான ஆதாரமாக இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

---

அறுவை சிகிச்சைக் கூடங்களில் இசையை ஒலிக்கச் செய்தல் மருத்துவ பணியாளர்களுக்கு இடையூராகவும், கவனச் சிதைவை ஏற்படுத்துவதாகவும் இருக்கும் என்று ஒரு புதிய ஆய்வு கூறியுள்ளது. 20 அறுவை சிகிச்சைகளை கண்காணித்த பிரிட்டிஷ் ஆய்வாளர்கள் சத்தத்துடனான இசை, பணியாளர்கள் தொடர்பு கொள்வதை கடினமாக்கியதுடன் அவர்களை பதற்றத்துக்கும் ஒருவித விரக்திக்கும் உள்ளாக்குவதாக கண்டறிந்துள்ளனர்.

---

புற்று நோய்க்கான மருந்து ஒன்று மனிதர்களின் உடலில் மறைந்திருக்கும் எச்.ஐ.வி. தொற்றை அவற்றின் மறைவிடத்திலிருந்து வெளியேற்ற வல்லது என ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். தற்போதைய நிலையில் எச்.ஐ.வி. தொற்றுக்கு எதிராக கொடுக்கப்படும் மிகவும் சக்திவாய்ந்த மருந்தான ஆண்டி ரெட்ரோ வைரல் கூட்டு மருந்து மனிதர்களின் இரத்தத்தில் எச்.ஐ.வி. வைரஸ்களை கொல்கிறது. ஆனால் மனித உடலில் வேறு இடங்களில் ஒளிந்திருக்கும் இந்த எச்.ஐ.வி. வைரஸ்களை இந்த கூட்டு மருந்தால் அழிக்க முடியாது. ஆனால் அப்படி ஒளிந்திருக்கும் வைரஸ்களை புற்று நோய்க்கான கூட்டு மருந்து வெளிக் கொண்டுவருவதில் வீரியத்துடன் செயல்படுவதாக ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# ஷாலோம் கிராம ஆலயம்

## ராம்புரி மத்தியப்பிரதேசம்



மத்தியப்பிரதேச மாநிலம் ஜாபுவா மாவட்டத்தில், மேக்நகர் தாலுகாவில் உள்ளடங்கிய பீல் ஆதிவாசி மக்கள் வாழும் கிராமம் தான் ராம்புரியாகும். இந்த கிராமத்து ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை அறியாமல் மிகவும் பாவமான வாழ்க்கை வாழ்ந்து, அந்தகாரத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டு வந்தனர். இவர்கள் சாராயம், போதை வஸ்துகளுக்கு அடிமைப்பட்டிருந்தனர். இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தவர் தான் சகோ. ஜக்குபாய் கல்லா.

சகோ. ஜக்குபாய் கல்லா அவர்களின் குடும்பத்தில் மொத்தம் 14 பேர் அசுத்த ஆவியின் கிரியைகளினால் பாதிக்கப்பட்டு ஒருவர் பின் ஒருவராக மரித்துவிட்டனர். 15வது நபராக அவரது மனைவி தல்லா பேன் இரத்தபோக்கு வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இதற்காக இவர் குறைந்தது 1.5 இலட்சம் செலவு செய்து மருத்துவம் பார்த்தும், மந்திர கிரியைகள் செய்தும் நோய் குணமாகவில்லை. மிகவும் சோர்ந்து போன நிலையில் இயேசு கிறிஸ்துவைக் குறித்தும், பக்கத்து கிராமமான விஜல்பூரில் கூட்டம் நடைபெறுவது குறித்தும் கேள்விப்பட்டு, அங்கு சென்றால் தனது மனைவிக்கு சுகம் கிடைக்கும் என்று விசுவாசித்து அங்கு தனது மனைவியை அழைத்துச் சென்றார். அங்கு அவரது மனைவிக்காக ஜெபித்தபோது, தேவன் அசுத்த ஆவியினால் ஏற்பட்ட சாபத்தை நீக்கி, வியாதியிலிருந்து முழுமையான சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தை பெற்ற இந்தக் குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.

மேலும் ஆராதனைக்காக தனது வீட்டை திறந்து கொடுக்கவே, அங்கு, சகோ. மத்தூர் புரியா அவர்கள் ஊழியத்தினை ஆரம்பித்தார். இந்த ஊழியத்தின் மூலம் அநேகர் இரட்சிக்கப்பட்டு ஆராதிக்க வர ஆரம்பித்தனர். ஆகவே தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியம் என உணர்ந்த சகோ. மத்தூர் புரியா அவர்கள் தனது நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகக் கொடுக்கவே, அந்த இடத்தில் ஒரு அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டு, 02.08.2015 அன்று பேராயர். வே. தேவதாஸ் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதில் தற்போது சகோ. மத்தூர் புரியா அவர்கள் ஊழியம் செய்து வருகிறார். 50க்கும் அதிகமான குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு ஆராதனை செய்து வருகின்றனர்.

இந்த ஆலயம் **இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின்** மூலம் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்டது.

**ரூ. 3 இலட்சங்கள் (or) ரூ. 2 இலட்சங்கள் மதிப்புகளில்**
**இந்த 2015 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க**
**முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



மாணவனின் பெயர் : சிலாஸ் T. மக்வானா

தந்தையின் பெயர் : தாஜீ மக்வானா

தாயாரின் பெயர் : சோம்லி மக்வானா

பிறந்த நாள் : 14.07.2007

படிக்கும் வகுப்பு : 4th Std.

சொந்த ஊர் : சீராமகுடி

மாவட்டம் & மாநிலம் : பான்ஸ்வாடா, இராஜஸ்தான்

மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:– இவனுடைய தந்தை இயேசுவை அறியாததற்கு முன் சாராயம், பீடி தம்பாக்கு, திருட்டு போன்ற பாவங்களுக்கு அடிமையாக இருந்தார். மேலும் இவனுடைய தாயாருக்கு பிசாசு பிடித்திருந்தது, தகப்பனாரும் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்தார். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. பின்பு ஷாலோம் விசுவாசி ரஞ்ஜி பாய் என்பவர் மூலம் போர்பாட்டோடு சபைக்கு சென்றார்கள். அங்கு ஊழியர் இவர்களுக்காக ஜெபித்த போது தேவன் இவர்களுக்கு பூரண விடுதலையை கொடுக்கவே, இந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர், அதன்பின் சகோ. தாஜீ மக்வானா அவர்கள் தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து தனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

மாணவனைக்குறித்து :– சிலாஸ் நன்றாக படிப்பான். நன்றாக ஜெபிப்பான். இவனுக்கு பாட்டுப் பாடுவது மிகவும் பிடிக்கும். இவனுக்கு ஒரு சகோதரன் உண்டு.

ஜெபியுங்கள் :– இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

மாணவனைத் தாங்குபவர் :– Baby. Melvina. R., Tuticorin.

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 700/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1195 மாணவர்களில் இன்னும் 206 மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

*Shalom Charity Mission* என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.